செ.வெ.எண் : 23/ மே நாள் : 25.05.2021

## இராமநாதபுரம் மற்றும் கீழக்கரை அரசு மருத்துவமனைகளில்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள்

## இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை மற்றும் இராமநாதபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இன்று (25.05.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் ஆகியோர் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார்கள். கூடுதல் ஆட்சியர்/ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மா.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 3252 நபர்கள் கொரோனா சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 2306 பேர் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 215 நபர்களும், பரமக்குடி அரசு மருத்துவமனையில் 104 நபர்களும், தனியார் மருத்துவமனைகளில் 75 நபர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் ஆகியோர் கீழக்கரை மற்றும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைகளில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

கீழக்கரையில் அரசு மருத்துவமனையில் மொத்தம் 60 படுக்கைகள் உள்ளன. அதில் 30 படுக்கைகளை ஆக்சிஜன் வசதியுடன் கொரோனா சிகிச்சைக்காக தயார் செய்திட மருத்துவ அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்கள். கீழக்கரை பகுதியில் கொரோனா தொற்று உறுதி செய்யப்படும் நபர்களை இம்மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை வழங்கிடவும், தீவிர மருத்துவ சிகிச்சைக்கான தேவை ஏற்படும் பட்சத்தில் இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரை செய்திட மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், சிகிச்சை பெறுவோருக்கு சத்தான உணவு தரமான முறையில் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். மருத்துவர்கள் தரப்பில் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமித்திட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஆய்வு செய்த போது, மருத்துவமனை வளாகத்தில் பாதாள சாக்கடை கால்வாய் பழுது காரணமாக நடைபாகையில் கழிவு நீர் தேங்கி இருந்ததை கண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கழிவு நீரை உடனடியாக அகற்றிடவும், பாதாள சாக்கடை கால்வாயை சீர் செய்திடவும் இராமநாதபுரம் நகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்கையில், கொரோனா சிகிச்சை வார்டுகளில் மொத்தம் 20 மருத்துவர்கள், 45 செவிலியர்கள், 30 அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என மருத்துவமனை கண்காணிப்பாளர் தெரிவித்தார். மருத்துவமனையில் செயல்படும் 3 கொரோனா பிரிவுகளுக்கு தலா இரண்டு மருத்துவர்கள் 5 செவிலியர்கள் வீதம் சுழற்ச்சி முறையில் பணியமர்த்தி கண்காணித்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார். மேலும், சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் ஆக்சிஜன் அளவை தொடர்ந்து கண்காணித்து தட்டுப்பாடு ஏற்படாமல் முன்னெச்சரிக்கையாக தயார் நிலையில் வைப்பதை மருத்துவர்கள் உறுதி செய்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, இராமநாதபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் (இராமநாதபுரம் ) திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், (பரமக்குடி) திரு.எஸ்.முருகேசன் அவர்கள் ஆகியோர், மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள 27 மண்டல குழுக்களுக்கான வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மண்டல குழு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் அரசு அறிவித்துள்ள கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான அறிவிப்புகளை எவ்வித சமரசமுமின்றி நடைமுறைப்படுத்திட வேண்டும் எனவும், விதிமீறல்களின் போது பாரபட்சமின்றி அபராதம் விதித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வுகளின் போது, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.அ.சகாய ஸ்டீபன்ராஜ்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.ஆர்.பழனிகுமார், இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஜவகர், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் (மருத்துவம்) திரு.ஜெயதுரை உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**